**செய்தி வெளியீடு எண்: 27/2023** **நாள்: 10.03.2023**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்**

சென்னை, நந்தனதில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மெட்ரோஸில் சர்வதேச மகளிர் தினம் நடைபெற்றது. மகளிர் தின நிகழ்ச்சியின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் நலனுக்காக இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

மேலும், மகளிர் தின நிகழ்ச்சியின் போது, சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக மெட்ரோஸில் பணியாற்றும் மகளிர் பணியாளர்களுக்கு வினாடி வினா போட்டி மற்றும் வேடிக்கை விளையாட்டுகள் நடத்தப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மு.அ.சித்திக் அவர்களின் மனைவி ஃபமிதா சித்திக் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மகளிர் பணியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

கடந்த காலத்தை ஒப்பிடும் போது நிகழ்காலத்தில் பெண்களின் முன்னேற்றம் என்பது வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் மூலம் பெண்கள் முன்னேற்றம் என்ற இலட்சிய நோக்கோடு பணியாற்றி வருகிறார்கள் என்பது தெரிய வருகிறது. தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் பெண்களின் பங்கு உண்டு. இதற்கு எடுத்துகாட்டாகதான் 1975-ஆம் ஆண்டு முதல் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. பெண்கள் கடினமாக உழைப்பதோடு மட்டுமில்லாமால் கால சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் பணியாற்றி வருகிறார்கள். இதுவே பெண்களின் முன்னேற்றம், வளர்ச்சி, ஒற்றுமையை காட்டுகிறது என்று சிறப்பு அழைப்பாளர் ஃபமிதா சித்திக் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மு.அ.சித்திக், இயக்குநர்கள் தி. அர்ச்சுனன் (திட்டங்கள்), டாக்டர். பிரசன்ன குமார் ஆச்சார்யா (நிதி), சுற்றுசூழல் தலைமை ஆலோசகர் டாக்டர் ராஜீவ் கே ஸ்ரீவஸ்தவா, உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**